1

நோக்கமற்றும் பயணம்கொள்



வேடிக்கை பார்க்கப்போனவனுக்கு வெள்ளரிப்பழம் கிடைப்பதும், அதனால் அவனுக்குக் கிடைக்கும் இன்பமும் பூரணமானது. வெள்ளரிப்பழமே வேண்டுமென்று திட்டமிட்டு கிடைக்கப்பெற்றவனை விடவும் எதேச்சையாக கிடைக்கப் பெற்றவனே முழுமையான மகிழ்ச்சியை அடைகிறான்.

இனி என்றும் ஆனந்தமாய் இருக்கவேண்டும் என்று தீர்மானம் கொள்பவனுக்கு இடையூறுகளை எப்படி எதிர்கொள்ளவேணும்

என்கிற எச்சரிக்கை உணர்வும் சேர்ந்தே பிறக்கிறதாம். இவ்வுணர்வு முழுமையான ஆனந்தத்தை அனுபவிக்கவிடாது என்பதே நிதர்சனமாகுமாம்.

இறுக்கமான மனநிலையோடு சிரிப்பதும், பயம் கலந்த உணர்வோடு இன்பத்தை சுவைப்பதும் இவ்வகைதனைச் சாரும். இது உறங்கியும் உறங்காத நிலையுமாகும். இதனைப் புரிந்துகொள்வதும், புரிந்துகொண்டாலும் அப்படியே ஏற்றுக்கொள்வதும் சற்று சிரமமானதாகவே இருக்கும்.

எந்த உயிரினமும் தன் பிறப்பையும் தன் பாலினத்தையும் தானே தீர்மானித்துக்கொண்டு உயிர்ப்பதில்லையாம். வாழும் சூழலையும் இன்னபிற வாழும் முறைகளையும் சுயமாக முடிவெடுக்கக் கற்றுக்கொள்ளும் புரிதலை அடையும் வரையில் நிதானித்து, எதனையும் எதிர்கொள்ளவேண்டியது கட்டாயமாகிறதாம்.

நாம் வாழும் சமுதாயம் திணிக்கப்பட்ட உணர்வுகளினால் உயிர்ப்பதையும் உருப்பெறுதலையும் தன்னகத்தே கொண்டதாகும். இது இயற்கையென்றும் அதுவே சரியென்றும் பழக்கப்பட்ட வழக்கங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பாகும். பெரும்பாலான இக்காலகட்டங்கள் நம் சமுதாய அங்கங்களான நம் சக மனிதர்களைச் சார்ந்தே அமையப்பெறுகிறதாம்.

உணர்வுகளின் பரிச்சயமும் உறவுகளின் இன்றியமையாமையும் நம் மனதுள் உள்வாங்கியதின் பிரதிபலிப்பாக அமையும் இரசனைகளும் இதர தேவைகளும் வாழ்க்கை பற்றிய புரிதலையும் நோக்கங்களை பற்றிய தெளிவையும் தேர்ச்சி செய்தலையும் தீர்மானிக்கிறதாம்.

ஏதாவது ஒருவித நோக்கத்துடன் மட்டுமே அமையப்பெறும் சந்திப்புகளும் அமைப்புகளும் பெரும்பாலும் வலுவான உறவுப்பிடிப்பினை அமைப்பதில்லையாம்.

ஏதோ ஒரு பலனை எதிர்நோக்கி நகர்த்தப்படும்...
ஒவ்வொரு செயலும்,
வெவ்வேறு பயணங்களும்,
அவற்றின் முடிவுகளும்,
முடிவுகளின் நிலைப்பாடுகளும்,
சாதக பாதகங்களின் சதவீகிதங்களும்,
சம்பந்தப்பட்டவர்களின் அடுத்தகட்ட நகர்வையும்,
உறவுகளின் தன்மையையும்,
புரட்டிப்போடும் காரணிகளாகின்றவாம்.

அனுபவங்களின் முதிர்ச்சியும் பக்குவமும்,
இடம் பொருள் பொறுத்த சமயோசிதங்களும்,
கைதூக்கியும் கோர்த்தும்,
பயணங்களின் திசைகளையும்,
அவற்றின் தூரங்களையும் நிர்ணயிக்குமாம்.

நோக்கமற்றது இலகுவாக்கும்.
நோக்கத்துடனும் நோக்கமற்றும்,
பகுத்தறிந்து தேவையின் நிறமறிந்து,
நிலையறிந்து பாகுபடுத்திக்கொண்டு,
சமநிலையோடு செயல்படுவது பாராட்டத்தக்கதாகும்.

மேற்கோள் காட்டிய பயணம், அகடு முகடுகளாய் பயணிக்கும் ஒலியின் பாதையைப்போல ஏறி இறங்கி அவ்வப்போது சிறிய வெற்றிடத்தையும் நிசப்தத்தையும் தந்து இனிமை கூட்டும்.

தன்னலம் பேணாது, தன்நிலையும் மாறாது சுற்றிவரும் சூரியன் மற்றும் இதர கோள்களைப் போல இருப்பதும் வாழ்வதும் மானிட வாழ்வினில் இயலாத காரியமாகும்.

சிறுசிறு அசைவிற்குள்ளும், ஏதாவது ஒரு நோக்கத்துடனே தொடரும் பயணம் ஒய்வற்றது, நிம்மதியை அழிக்கவல்லது.

சராசரி மனிதனின் வாழ்வையும் நேரத்தையும்,
பெரும்பாலும் பங்கிட்டுக்கொள்ளும் சின்னஞ்சிறு விஷயங்களும்,
அவற்றின் பாதிப்புகளும்,
அதனைக் கடந்து சென்ற பின்னும்,
அசைபோட்டு முகர்ந்து பார்த்து...
சிலிர்த்துப்போகும் தருணங்களும்,
நோக்கமற்று எதேச்சையாக...
அமையப்பெற்ற நிகழ்வாகவே இருக்கும்.

நன்னெறி கொண்டு பிழறாமல் நோக்கமற்று முன்செல்லும் பயணம் வாழ்வை வென்ற வாழ்வாகும். இது முக்தி நிலையாகும். நோக்கமற்ற பயணத்தைத் தேர்வு செய்யவும், பயணம் மேற்கொள்ளவும், மிகவும் துணிச்சலும் பக்குவமும் அவசியமாகும்.

ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் மட்டுமே மேற்கொள்ளும் பயணம் பெரும்பாலும் இலக்கினைச் சரியாக அடைய வழிவகுக்கும். ஆனால் குறுகிய பார்வையாலும், விசாலமற்ற தன்மையாலும், வெற்றியின் நிறைவினையும், ருசியினையும் முழுமையாக அனுபவிக்க இயலாத தன்மையுடன் தனித்தே நிற்கும்.

முடிவினை முன்கூட்டியே அறிவதற்கு முடியாத சின்னஞ்சிறு தவிப்புகளும் அவிழ்க்க முடியாத முடிச்சுகளும் சுவாரசியத்தைக் கூட்டும் ஆர்வத்தைத் தூண்டும்.

முடிச்சு அவிழ்ந்தபின் முழுமையான சுகத்தினைப் பரிமாறிடும். இது அந்தந்தச் சூழலுக்குத் தகுந்தாற்போல ஏற்படும் தளர்வினைப் போக்கிடும் மருந்துமாகும்.

ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் வடிவமைத்து வாழ்வதும் பயணிப்பதும் தவறல்ல. இயந்திரத்தனமல்லாது இடையிடையே வரும்

2

யாரென்ன சொன்னாலும்



செவிக்கு உணவு இல்லாதபோழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

- காதுக்கு உணவில்லாதபோதுதான் வயிற்றுக்கு உணவளிக்க வேண்டும். இது வள்ளுவர் வாக்கு.

நாம் அனைவருக்கும் கேட்கும் திறன் தாயின் கருவறையிலேயே சிசுவிற்கு பரிச்சயப்பட்ட ஒன்றாகும். தாயின் இதயத்துடிப்பில் தொடங்கி இன்னபிற இசை மற்றும் ஒலிகளின் அலைநீளங்களும் அதிர்வுகளும் தாயின் பார்வையில் சேய்க்கு உட்புகும்.

தாயுடன் கூடிய தந்தையின் அரவணைப்பும், இதர சூழல்களின் பாதிப்பும் தாயின் மனநலனைப் பொறுத்து மாற்றம் செய்யும். நல்லதையும் கெட்டதையும் பாகுபடுத்தி பிரித்துப்பார்க்கத் தெரியாதபொழுதும் உள்வாங்கிக்கொள்ளும்.

தாயின் வாயிலாக உட்செல்லும் விஷயங்களின் தன்மைகள் சிசுவின் குணங்களையும், இரசனைகளையும் ஓரளவிற்குப் புரட்டிப்போடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லையாம்.

செவியினாலே பெரும்பாலான குழந்தையின் கற்றுக்கொள்ளும் திறன் ஆரம்பமாகிறது. கண்களும் தொடு உணர்வும் அடுத்தடுத்துக் கற்கும் திறனை வளர்க்கின்றன.

நுகரும் தன்மையும் சுவைக்கும் தன்மையும் அறிவு விருத்தியைவிட உணர்வுகளைத் தூண்டுவதிலேயே பெரும்பங்கு வகுக்கின்றன. செவிவழி உட்புகுவனவிற்குச் சற்று வீரியம் அதிகம். இது உணர்வுத் தூண்டலுடன் அறிவைப் பெறுவதிலும், பகிர்வதிலும் வகிக்கும் பங்கு அபரிமிதமானது.

பெரும்பாலும் இது இசையாகவும்,

மனதை வருடும் பேச்சாகவும்,

வசியப்படுத்தும் பாராட்டாகவும்,

நல்விமர்சனமாகவும்,

உத்வேகத்தைத் தூண்டும் கருத்துப் பரிமாற்றமாகவும் அமையலாம்.

மொழிக்கு எழுத்து வடிவம் கிடைக்கும் வரையிலும்,

எழுத்தறிவு ஏடுகளிலும் கல்வெட்டுகளிலும் வலம்வரும் முன்னும்,

கலாசாரத்தையும், இன்னபிற வாழும் முறைகளையும்,

பின் தொடர்ந்த தலைமுறைகளுக்கு ...

செவிவழியாகத்தான் கற்றுக்கொடுத்தும், ஊடுருவியும்,

தழைத்து நின்றதாக வரலாறு கூறுகின்றது.

சுயமாக சிந்திக்கத் தொடங்கியபின் செவிமடுப்பதில் ஒரு சுணக்கம் வருவதை நம்மால் மறுக்கமுடியாது.

ஈடுபாடும், ஆர்வமின்மையும்,
அனுபவங்களும், தேவைகளும்,
அறியாமைகளும், இன்றியமையாமைகளும்,
சூழலும், கையாளுபவனின் நேர்த்தியும்,
தன்னம்பிக்கையும், பிடித்தமும்,
பற்றியதன் தெளிவும், அங்கீகாரமும்,
இடம், பொருள், உறவு மற்றும் காலம்...

இவை நான்கும் சேர்ந்தமைந்த கட்டாயமும் -
செவிமடுப்பதைத் தேர்வு செய்யும் காரணிகளாகும்.

தெளிந்த நிலைக்குப் பிறகு செவிக்கு இன்பமாகவே பேசுவதும், அதனைப் பிறழாது செவிமடுத்துப் பின்பற்றுவதும் மிகமிக அரிதானதாகும்.

நல்லதையே பேசுவதும்,
அதனை நயம்படவே பேசுவதையும்,
இப்படி நல்லதை மட்டுமே கேட்கின்ற ஒரு வாய்ப்பும் -
கிடைப்பதற்கரிய மிகப்பெரிய வரமாகும்.

செவிமடுப்பதென்பது -
செவிவழி வாங்கியவற்றை,
மாற்றமில்லாமலும்,
நல்லெண்ணம் கொண்டும்,
சில-பல மாற்றங்களோடும் ஏற்றுக்கொள்வதாகும்.

சரி-தவறுகளை சூழலுக்கேற்ப ஆராய்ந்து,
தேர்வு செய்து, தேர்ச்சி பெறுவதும்,
அமைதி காண்பதும் வெற்றி காண்பதாகும்.

இதுவே தொடர்வதும், இயல்பாகிப் போவதும், ஒன்றொடொன்று ஒன்றிப்போவதும் பாராட்டத்தக்கதாகும்.

ஆணவமிகுதியினால் விளைந்த தான்தோன்றித்தனமும்,
அதீத தன்னம்பிக்கையாலும், காழ்ப்புணர்ச்சியாலும்,
பொறாமையின் மிகுதியாலும்,
முளைக்கும் தன்முனைப்பும்,
மனதுள் தோன்றி...
செவிமடுப்பதைப் புறம்தள்ளித்
தாழிட்டு மெல்லக் கொல்லும் நஞ்சாகும்.

இந்த நிலை பெருந்தோப்பினில் இருந்தாலும், தனித்து நிற்கும்,
ஓட்டியும் ஒட்டாத,
நிம்மதியை உருக்குலைக்கும்,
வறட்டு கௌரவமாகி...
எதற்குமே உதவாத ஒரு நிலையாகும்.

எல்லாவற்றையும் செவிமடுத்துக் கேட்பது தவறில்லை.
எதனை எடுத்துக்கொள்வதென்றும்,
எதனை தூக்கிவீசுவதென்றும்,
ஆராய்ந்து, உணர்ச்சியின் வசப்படாது எடுக்கப்படும்,
தெளிவான முடிவுகள் என்றும் வளர்ச்சியைத் தேடித்தரும்.

சிலசமயங்களில் உள்வாங்கித் தள்ளிப்போடுவதும், பின் அசைபோடுவதும் விஷயங்களின் தன்மையைப் பொறுத்த பக்குவத்தைத் தரும் பாடமாகும்.

எதற்கும் செவிமடுக்காத மேதாவித்தனமும், எல்லாவற்றிற்கும் செவிமடுத்து ஆடும் பத்தாம்பசலித்தனமும், என்றென்றும் இடும்பைத் தரும்.


செவிமடுப்பது நம் பிறவிக்குணமாகும். செவிமடுப்பது, மற்றவரையும் அவரது உணர்வினையும் மதிக்கும் முதல்படியாகும்.

செவிமடுப்பதை நம் வளர்ச்சிக்கும், நம்மைச் சார்ந்தவர்களின் வளர்ச்சிக்கும், இயன்றவரையில் யாரையும் பாதிக்காதவரையிலும் பயன்படுத்துவோமென உறுதிகொள்வது உகந்தது.

காதுக்கு உணவில்லாதபோதுதான் வயிற்றுக்கு உணவளிக்க வேண்டும் என்ற வள்ளுவர் வாக்கு நிதர்சனமான நியதியாகும்.

3

பெண் பாதி – ஆண் மீதி



நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு.

எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்றால், மழை இல்லையானால் ஒழுக்கமும் நிலைபெறாமல் போகும் - இது திருவள்ளுவர் வாக்கு.

உவகையுடனும், சமயங்களில் கரை புரண்டும் கடலைச் சேரும் நதிகளும்,

சூரிய வெப்பத்தினை உட்கொண்ட கடல் வெளிக்கொணரும் மேகங்களும்,

காற்றைத் தழுவி மழையாகும் மேகங்களும்,

ஒன்றையொன்று தவிர்க்கயியலாத உறவுகளாகும்
இவை மீண்டும் மீண்டும் தொடர்ந்து சுழலும் ஒய்வில்லா
இயக்கமுமாகும்.

இந்த இயக்கங்கள் இயற்கையை ஒன்றியும்,
செயற்கை அமைப்புகளையும்,
அவற்றின் பக்கவிளைவுகளின் வீரியங்களையும் பொறுத்தும்,
இடம் மற்றும் காலநேரங்களின் அளவுகோல்களில் மாற்றம்
கொள்ளும்
அழித்தாலும், மீண்டும் அதுவே அனைத்து வழிநடத்தும்
வாழ்வாதாரமுமாகும்.

நீரின் அளவு வெவ்வேறு அமைப்புகளிலும்,
ஒட்டுமொத்தமான கூட்டமைப்பிலும்,
ஒரே சீரான அளவுகளுடனும்,
இயல்பினில் பெரியதொரு மாற்றம் காணாதவரையிலும்,
புவியின் தட்பவெப்ப நிலையும்,
இன்னபிற உயிர் வாழ சாதகமான இயற்கை சூழல்களும்,
ஒருங்கிணைந்து செயல்பட்டு,
மானுடமும் மற்ற உயிரினங்களும்,
வாழ்வதையும், வாழ்க்கையையும்,
தீர்மானிக்கும் காரணிகளாகும்.

மழைநீரும், அருவிநீரும்,
ஆற்றுநீரும், கடல்நீரும், நிலத்தடிநீரும்,
பூலோக அமைப்புச் சார்ந்து...
தத்தம் இயல்பினில் வேறுபட்டாலும்,
ஒவ்வொன்றின் இயல்பைப் பொறுத்து...
இன்னபிற உயிர்களின் வாழ்வாதாரமும்,

இதர அமைப்புகளும் சார்ந்தமைந்திருக்கும்.
ஒவ்வொன்றும் நேரிடையாகவும், மறைமுகமாகவும்,
ஒன்றொடொன்று தொடர்பு கொண்டிருக்கும்.

இயற்கையில் இவையனைத்தும் நீரின் இயல்பை அடிப்படையாகக்கொண்டு பிரிக்கப்பட்டும் பிணைக்கப்பட்டும் அமையப்பெற்றிருக்கும்.

இது இதனால் பெரியது என்றும், அது இதனால் சிறியது என்றும், அறுதியிட்டுக்கூறுவது அர்த்தமாகாது. இங்கு எதுவும் தனது இடத்தில் அதனதன் காரண காரியங்களுடன் பெரியதாகப் போற்றப்படும்.

ஆண்- பெண் அமைப்புகளின் இயல்பும் நியதியும் அ(இ)ப்படித்தான் அமையப்பெற்றதாகும்.

ஆணும், பெண்ணும்,
தத்தம் நிலைகளில் அவ்வப்போது
உயர்ந்தாலும், தாழ்ந்தாலும்,
சூழலின் தன்மைக்கேற்ப...
உடன் பயணிப்பதும், மற்றதும்
நல்ல - கெட்ட பாதிப்புகளுக்கு உந்தப்பட்டு உட்படும்.

ஆணும், பெண்ணும்
பிரித்துப்பார்க்கக் கூடாததும், இயலாததுமாகும்.
பெண்ணில்லாத ஆணும்,
ஆணில்லாத பெண்ணும்,
முழுமை பெறாதது, நிறைவு கொள்ளாதது.

பெண்ணுக்குத் தாய்மையும்,
ஆணுக்கு ஆளுமையும்,
அவரவர்க்கு தன்னிறைவு தருவதாகும்.

ஆழ்ந்து பார்க்கையில்
தாய்மையும், ஆளுமையும்
ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கமுடியாதது.

இவ்விரண்டுக்குமே ஒருவரையொருவர்
பண்பு பாராட்டுதலும்,
இன்னபிற பகிர்தலும் அவசியமாகும்.

இருவரின் ஒத்துழைப்பின்றி இவ்விரண்டு தனிப்பெரும் அடையாளங்களும் அங்கீகரிக்கப்படமாட்டாது. அங்கீகரிக்கப் படாதது முழுமை பெறாதது, நிறைவினைத் தராதது.

வேலியற்ற காற்று மேகத்தோடு -
காதல் கொண்டு மழையாகிக் கரைந்தது
மண் மீது மழை காதல் கொண்டு -
மண்ணோடு முத்தமிட்டுக் கலந்தது
மனம் குளிர்வது, பசி மறப்பது இயல்பானது
பள்ளம் நோக்கிப் பாய்ந்தது நதியானது
நதி கொண்ட காதல் கடலோடு புகுந்தது
கொதித்தது குளிர்ந்து, மீண்டும் மேகமானது

பெண்ணுக்கு முழுமை, ஆணோடு சேர்வது
ஆணுக்கு முழுமை, பெண்ணோடு வாழ்வது
வாழ்வுக்கு முழுமை, ஒன்றையொன்று மதிப்பது
மதித்தலுக்கு முழுமை, வாழ்ந்து காட்டுவது

தன்னோடு மட்டுமே வருவது பற்றாவது
மாற்றானோடு வருவதே ஈர்ப்பாவது
ஆழமான ஈர்ப்பு காரணமறியாதது
காரணம் கொண்டது காதலாகாது

காதல் இல்லாதது வாழ்க்கையாகாது
ஆண் - பெண் காதல் இயல்பானது
சிறியது - பெரியது இதில் முரணானது
வேறுபடுத்தி அளவிட முடியாதது, சமமானது.

ஆணும், பெண்ணும்
பிரித்துப்பார்க்க கூடாததும், இயலாததுமாகும்.
பெண்ணில்லாத ஆணும்,
ஆணில்லாத பெண்ணும்,
முழுமை பெறாதது, நிறைவு கொள்ளாதது.

இவ்விரண்டுக்குமே ஒருவரையொருவர்
பண்பு பாராட்டுதலும்,
இன்னபிற பகிர்தலும் அவசியமாகும்.

4

வேறென்ன வேண்டும்?



நாம் எப்பொழுதும் எதையாவது நோக்கியும், தேடியும் ஓடிக்கொண்டே இருக்கின்றோம். இந்தத் தேடல் நம்முள், நாம் அறிந்தும், அறியாமலும் குடியேறி நம்மை ஆட்கொள்கிறது. ஒரு இலக்கை முடிவு செய்து, அந்த முடிவினை அடைந்த பின்னும், தேடல் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

நாம் பிறந்ததலிருந்து, இறக்கும்வரை, நம்மை உந்தித்தள்ளும் இந்த நியதிகளை நாம் அடிப்படையில் எப்படி ஏற்றுக்கொள்கிறோம். ஒருவருடைய தேவைகளை யார் நிர்ணயம் செய்வது? எப்படித் தேர்வு செய்யப்படுகிறது?

தாயின் கருவறையிலிருந்து வெளிவந்த குழந்தை,
பிரபஞ்சத்தின் வெளிச்சத்தையும்,
தட்பவெப்ப சூழலையும்,
தொடு உணர்வுகளையும்,
நெருடலாகவும், அந்நியமாகவும் உணருகிறதாம்.

இதன் பிரதிபலிப்பாக குழந்தை அனிச்சையான அழுகை மூலம் தன்னுடைய சங்கடத்தை வெளிப்படுத்துகிறதாம்.

தொப்புள்கொடி மூலம், தாயின் கருவறையில் சகலமும் பெற்று வளர்ந்த சிசுவிற்கு, பிரசவத்திற்குபின் பசி வயிற்றைப் பிசைவதை எதிர்கொள்ளயியலாமல் என்னவென்று புரியாமல் அனிச்சையாகவே தன் உணர்வினை அழுகை மூலம் வெளிப்படுத்த முயலும்.

வெகுசுலபமாக சிந்திக்காமலேயே, தாயின் அரவணைப்பில், சில முயற்சிகளிலே பாலுண்ணப் பழகிக்கொள்ளும். எதனைப் புரிந்து இதனைக் கற்றுக்கொண்டது?

பசி என்ற நிதர்சனமும், உந்தப்பட்ட நிர்ப்பந்தமும், புரியாமலேயே பழகி புரிந்துகொள்ளப்பட்ட ஒன்றானது. இவ்வண்ணமே குழந்தை பாலுண்ணவும், இன்னபிற விஷயங்களையும் தேடி தனது பயணத்தைத் தொடங்குகிறது.

கருவறையில் குழந்தைக்கு பழகிப் போயிருந்த விஷயங்களிலிருந்து, பரிச்சயமற்ற, ஆனால், உடனடியான தாக்கத்தை ஏற்படுத்திய புதுப்புது விஷயங்களுக்கு அது காட்டும் எதிர்வினையே அழுகையாக வெளிப்படும்.

இயற்கையாகவே தன்னுடைய சௌகரியங்கள் தடைப்படும் போதும், குறையும்போதும், அனிச்சையாக நாம் அப்பிரச்சினைக்கு எதிராகக் குரல்கொடுக்கத் தொடங்குகிறோம்.

எதிர்ப்பினைக் காட்டுவது இயல்பிலேயே நமக்கு அமைந்த பண்பாகும். நம்முடைய தேவை எது என்பதை நம்மால் கண்டுகொள்ளும் சக்தியும் தகுதியும் இயற்கையிலேயே நமக்கு அமைந்திருக்கிறது. இதில் எள்ளளவும் ஐயமில்லையாம்.

உன்னுடைய தேவைகளை மற்றவர்கள் தீர்மானம் செய்யத் தொடங்குவதில்தான், உன் தேடலின் திசை மாற்றம் கொள்கிறது.

சூழலைக் கண்டும், கொண்டும் தூண்டப்பட்ட ஆசைகளால் மேலெழும்பும் உணர்வுகளின் வசப்பட்டு, உடன்படுகையில் துன்பத்திற்கு ஆளாக நேரிடுகிறது.

அத்தியாவசியத் தேவைக்கும் ஆடம்பரத் தேவைக்கும் இடையிலான வித்தியாசம் கண்டுகொள்ளவேண்டும்.

எதிர்காலத்தை ஒட்டிய தொலைநோக்குப் பார்வையும் எச்சரிக்கை உணர்வும் அவசியமாகும். இவை தீராத பசியாகவும் பயம் தூண்டும் நோயாகவும் உருவெடுக்கும் பட்சத்தில் தன்னிறைவு அடையத் தவறிவிடும்.

நீ உனது இலக்கை எட்டியபின், அத்தியாவசியத்தைப் பூர்த்தி செய்தபின், உன்னைச் சார்ந்த உலகுக்காக உன் பயணத்தைச் செலுத்து.

பார்வையை விசாலமாக்கப் பழகிக்கொள். தன்னிறைவு பெற்றதைத் தள்ளிவைத்து, புது இலக்கை புது இலக்கணத்தோடு கையகப்படுத்து. வாழ்க்கை உனக்கு ருசிக்கும், வாழ்வது பிடிக்கும்.

புதிய கஷ்டங்களும், புதுப்புது கடினமான விஷயங்களும் பழகப்பழகப் புளித்துப்போகும். தொடங்கி புழங்குகையில் இளகிப்போகும். இளகியது உன் வழிக்கு வரும். இது நமக்கு புவி பரிச்சயமானதில் இருந்தே பழகிப்போன இயல்பாகும்.

இடைப்பட்ட காலங்களில் உந்தப்பட்டு ஏற்பட்ட வடுக்களின் சாரம் சற்று ஆங்காங்கே எட்டிப்பார்த்தும், எள்ளிநகைத்தும், உள்ளுள் சபலத்தையும் சலனத்தையும் துளிர்க்கச்செய்யும்.

தளராது முயல்வதும், முனைப்பு கொள்வதும் உன்னை உனக்கே அடையாளம் காட்டும் காணும் வழியாகும். சரி - தவறு பற்றிய அலசல் அவசியம். சந்தர்ப்பங்களைக் குறைசொல்லும் மனோபாவம் குறையவேண்டும்.


வேறென்ன வேண்டுமென்ற -
தெளிவான பார்வையும்,
அதை நோக்கிய திட்டமிடலும்,
வீறுகொண்ட நடையும்,
தொடர்ந்த பயணமும்,
வெற்றியைக்கவ்வும் வழியாகும்.
துளியும் இதில் ஐயம் வேண்டாம்.

குறுகிய மனப்பான்மையைக் கைவிட்ட நோக்கம் பாராட்டுக்குரியதாக இருக்கும்.

எங்கே செல்லும் இந்தப் பாதை என்று கேள்விக்குறியாகாமல், இதுதான் என் பாதை, இதுவே என் பயணம் என்று தீர்மானித்துச் செயல்படு. இடத்தையும் காலத்தையும், இன்னபிற சேர்க்கைகளையும் தீர்மானிப்பது நீயாக இருக்கட்டும்.

5

ஆதலினால் புகழ்பாடு



பாராட்டுக்கு மயங்காத மனமே இல்லை. இது மனிதம் மட்டுமல்லாது பெரும்பாலான பாலூட்டிகளுக்கும், இன்னபிற சிநேகம் பாராட்டும் விலங்கினங்களுக்கும் பொருந்திப்போகும்.

தாயின் கொஞ்சலில் ஆரம்பிக்கும் இந்த இனம் புரியாத பாராட்டு சேயின் வளர்ச்சியில் நேரிடையாக பெரும் பங்கு வகிக்கின்றதாம்.

தவழுதல், நடைபயிலுதல், எச்சிலொழுகப் பேச முனைவதென எல்லாச் செயல்களின் வீரியங்களுக்கும் பண்பு பாராட்டப்படுவதே முதன்மையாக அமைகிறதாம்.

ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு சத்தான உணவு அடிப்படையாக விளங்குவதுபோல, ஆரோக்கியமான மனவளர்ச்சிக்கு வெளிப்படையான பாராட்டுகள் வழிவகைசெய்யும்.

ஜனனம் முதல் மரணம் வரை அனைத்து முக்கிய நிகழ்வுகளையும் மற்ற உறவுகளோடு பகிர்ந்து கொள்கையில் சுப நிகழ்வுகள் மேலும் மெருகடைகிறதாம். இறுக்கமான சூழல் இலகுவாகிறதாம்.

பல்முனை வாழ்த்துகளில் மனம் சிலாகித்துப்போகும் உறவுநிலைகளின் இணக்கம் பொறுத்து நெகிழ்ச்சி காணும். இதைப்போலவே நெருடலான சமயங்களில், நெருங்கிய உறவுகளால் மனம் குளிர்ச்சியாகும்.

துக்கமான நிகழ்வுகளில் ஏனைய உறவுகளின் ஆறுதலான வார்த்தைகளில் மனமும் ரணமும் சற்று குளிர்ந்துபோகும். இறுக்கமான சூழல் தளர்ந்துபோகும். காழ்ப்புணர்வு இளகிப்போனதால் விலகிச்சென்றது நெருங்கிவரும் வாய்ப்புகளாகும்.

பாராட்டு, பாராட்டு பெறச்செய்யும். பண்டைய காலங்களில் முடிசூடிய மன்னர்களும் இன்னபிற பெருநிலக்கிழார்களும் புலவர்களின் பாராட்டுகளில் புளகாங்கிதம் கொண்டு கலையோடு தத்தம் திடத்தையும் வளர்த்துக்கொண்டனராம்.

பாராட்டிச்சீராட்டுவது இறுக்கமான சூழலையும் இலகுவாக்கும், மங்களமாக்கும். நேரிடையாக சம்பந்தப்பட்டவரின் தன்னம்பிக்கையைப் பீறிட்டு எழச்செய்யும், முன்னோக்கிப் பாயச்சொல்லும்.

வாழ்த்திப்பேசும் வார்த்தைகளின் நல்லதிர்வுகள் உதட்டளவிலே இருந்தபோதிலும், அதற்கு மூடரையும் முனைவராக்கும் சக்தி உண்டாம்.

கூட்டுப்பிரார்த்தனைகளும் இவ்வகைதனையே சாரும். வேறு எதனையுமே இழக்காத வெறும் வார்த்தை ஜாலங்கள் வாழ்க்கையையே புரட்டிப்போட்டு வண்ணமயமாக்கும்.